ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2126/29 - 2019 ජුනි මස 04 වැනි අඟහරුවාදා - 2019.06.04
*2126/29 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மாகாண மாகாண சபை**

*தென் மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கூட்டுறவுச் சேவை ஓய்வூதிய சாசனம்*

**கட்டளை**

*தென் மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கூட்டுறவுச் சேவை ஓய்வூதிய சாசனம் 24 ஆம் பந்தியின் கீழ் தென் மாகாண சபையின் விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோக, வியாபார மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான அமைச்சராகிய என்னால் பின்வரும் கட்டளை இதன் மூலம் விதிக்கின்றேன். இந்தக் கட்டளை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து அமுலாக்கப்படும்.*

உடலமத்த கமகே தயாவங்ச ஆரியதிலக,
தென் மாகாண சபை விவசாய, கமத்தொழில் அபிவிருத்தி,
நீர்ப்பாசன, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு,
உணவு வழங்கல் மற்றும் விநியோக, வியாபார
மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான அமைச்சர்.

தென் மாகாண விவசாய அமைச்சு அலுவலகம்,
4 ஆம் மாடி, "தக்சிணபாய, லபுதுவ, காலி,
2019, ஏப்பிறல் 09.

1A - PG 4546 — 20 (2019/06)
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## தென் மாகாணத்தின் மாகாண சபை கூட்டுறவுச் சேவையாளர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் கட்டளை வரைவு

*கட்டளைகள்*

*சுருக்கப் பெயர்.*

*1. இக்கட்டளைகள் தென் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் ஓய்வூதியத் திட்ட முறைக் கட்டளைகள் என அழைக்கப்படுகின்றது.*

*அங்கத்துவம் பெறுவதற்கான தகைமைகள்.*

*2.* (i) *1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கம் கொண்ட கட்டளைச் சட்டங்களின் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவுச் சங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் அல்லது கடமையில் ஈடுபட்டு உள்ள, இதில் எதிர்காலத்தில் சேவையில் ஈடுபட உள்ள ஊழியர் எனக் கருதப்படுகின்ற 2019 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தென் மாகாண சபை கூட்டுறவுச் சங்க ஊழியர் ஆணைக்குழுவின் நியதிச் சட்டத்தின் பொருள் கோடப்பட்ட நிரந்தர நியமனத்தினைப் பெற்றுக்கொண்ட ஓர் ஊழியர் கூட்டுறவு ஊழிய ஓய்வூதியத் திட்ட முறைக் கட்டளைகளின் கீழ் அங்கத்தவராவதற்கு இணைத்துக்கொள்வதற்கு உரித்துடையவர் ஆவார்.*

(ii) *மேலே இலக்கம் 2.* (i) *இன் கீழ் எவ்வாறு குறிப்பிடப்பட்டு இருப்பினும், தென் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டம் நடைமுறையாகும் திகதி தொடக்கம், கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் அல்லது கடமையில் ஈடுபட்டு உள்ள, மேலே 2.* (i) *இன் நிபந்தனைகளின் பிரகாரம் நியமனம் பெற்றுக்கொள்ளாத ஊழியர்கள் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில், அனுமதிக்கப்பட்ட குழுவினை மதிப்பிட்டதன் பிரகாரம் தகுதியான பதவிகளுக்கு நிரந்தரப் பதவியினை வழங்குவதற்கு தென் மாகாண சபை கூட்டுறவுச் சங்க ஊழியர் ஆணைக்குழுவின் அனுமதியினைப் பெற்று நியதிச் சட்டத்தின் அனுமதியினைப் பெற்று இருப்பின், அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் இத்திட்ட முறைமைகளின் கீழ் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி உடையவர் ஆவார்.* (iii) *இந்நியதிச் சட்டத்தின் நடைமுறையாகின்ற திகதிக்குப் பின்னர் இணைத்துக் கொள்ளப்படுகின்ற ஊழியர்கள் தொடர்பில் மேலே* (ii) *உரித்து உடையவை அல்ல.*

*விருப்பினை வெளிப்படுத்தல் மற்றும் விண்ணப்பித்தல்.*

*3.* (i) *(அ) இவ் ஓய்வூதிய திட்ட முறைமை நடைமுறையாகும் திகதிக்கு கடமையில் ஈடுபட்டு உள்ள, ஓய்வூதியத் திட்ட முறைமைக்கு இணங்க ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதற்கு தகுதி பெற்ற ஒருவர், தான் அங்கத்தவராக ஓய்வூதிய திட்ட முறைமைக்கு விருப்பினைத் தெரிவிக்க வேண்டும்.*

*(ஆ) இவ் ஓய்வூதிய திட்ட முறைமையில் இணைந்துகொள்ள எதிர்பார்க்கின்ற ஓர் ஊழியரினால் இங்கு பணிப்பாளராக பெயர் குறிக்கப்படுகின்ற திட்ட முறைமைப் பணிப்பாளர் மூலம், பயன்படுத்தப்பட உள்ள நியமித்து வைக்கப்பட்டு உள்ள விண்ணபப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து அதிகாரத்தினை வழங்கியுள்ள உத்தியோகத்தருக்கு பணிப்பாளர் மூலம் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் முன்வைக்கப்பட வேண்டும்.*

*(இ) மேலே 03.* (i) *(ஆ) இல் குறிப்பிடப்பட்ட கால எல்லை இந்நியதிச் சட்டம் நடைமுறையாகின்ற திகதி தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு மேற்படாத காலப்பகுதியாக வேண்டும்.*

(ii) *இத்திட்ட முறைமை நடைமுறையான திகதிக்குப் பின்னர் மற்றும் இக்கட்டளைகள் நடைமுறையாவதற்கு முன்னர் நிரந்தர பதவி வகிப்போருக்கு மற்றும் இந்நியதிச் சட்டம் நடைமுறையாவதற்கு முன்னர் நிரந்தர சேவையில் இணைகின்ற மற்றும் இணைந்த ஊழியர்கள், பணிப்பாளர் மூலம் பயன்பாட்டிற்காக ஒதுக்கி உள்ள விண்ணப்பப்படிவங்கள் சமகால அதிகாரம் கையளிக்கப்பட்டு உள்ள அதிகாரிக்கு பணிப்பாளர் மூலம் விதிக்கப்பட்டு உள்ள கால எல்லைக்குள் முன்வைக்கப்பட வேண்டும்.*

(iii) இக்கட்டளை நடைமுறையான திகதி தொடக்கம் நிரந்தர சேவைக்கு இணைந்துகொண்ட ஓர் ஊழியர், தனது சேவையில் இணைந்து கொண்ட நாள் தொடக்கம் 90 நாட்கள் கொண்ட காலத்திற்குள் பணிப்பாளர் மூலம் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டு உள்ள விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்து சமகால செயற்பாடுகளுக்காக பணிப்பாளர் மூலம் அதிகாரத்தைக் கையளித்த உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. (i) ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பப்படிவம் ஒன்று கிடைக்கப்பெற்றவுடன் விண்ணப்பதாரியின் தகுதிகள் தொடர்பாக வழங்கப்படுகின்ற தகவல்களின் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதனை அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதோடு, விண்ணப்பம் கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் தமது சிபாரிசுடன் பணிப்பாளரிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அங்கத்தவராகக் கருதுதல்.

(ii) பணிப்பாளர் மூலம் விண்ணப்பப்படிவம் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவ்விண்ணப்பதாரர் அங்கத்தவராகக் கருதப்படும்.

(iii) கீழ்க்காணப்படும் ஒரு விடயம் அல்லது பல விடயங்களின் பேரில் எவரேனும் ஒரு விண்ணப்பதாரியின் கோரிக்கை நிராகரிக்கப்பட முடியும் :

(அ) இக்கட்டளைகள் வரைபுகளின் 02. (i), 02. (ii) குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஊழியராக இல்லாத சந்தர்ப்பத்தில் ;

(ஆ) 18 வயதிற்குக் குறைந்த மற்றும் 60 வயதிற்கு மேற்படாத ஊழியரான சந்தர்ப்பத்தில் ;

(இ) விண்ணப்பப்படிவம் பூர்த்தி அடையாத சந்தர்ப்பத்தில் ;

(ஈ) உண்மைக்கு மாற்றமான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ள சந்தர்ப்பத்தில் ;

(உ) விண்ணப்பப்படிவத்தில் இக்கட்டளைகளின் தொடரில் குறிப்பிடப்பட்டு உள்ள கால எல்லைக்குள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில்.

(iv) ஏதேனும் ஒரு விண்ணப்பப்படிவம் பணிப்பாளர் மூலம் நிராகரிக்கப்படல், இங்கு இனிவரும் ஆலோசனைக் குழு எனக் குறிப்பிடப்பட்டு திட்ட முறைமை ஆலோசனைக் குழுவின் உடன்பாட்டின் பேரில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறான விண்ணப்பப்படிவம் ஒன்று நிராகரிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், ஆலோசனைக் குழுவின் உடன்பாடு கிடைக்கப்பெற்ற திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு பணிப்பாளர் மூலம் தெரிவிக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை நிராகரித்தல்.

5. (i) திட்ட முறைமைக்குள் இணைகின்ற அங்கத்தவர் தனது மாதாந்த அங்கத்துவத் தொகையாகப் பணிப்பாளருக்குச் செலுத்த வேண்டியதோடு, அவ்வங்கத்துவத் தொகையினைன தனது மாதாந்த சம்பளத்தில் அறவிட்டுப் பணிப்பாளருக்குச் செலுத்தப்பட வேண்டும் எனச் சேவைத் திட்டக் குழுவிற்கு, சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு எழுத்து மூலமான அதிகாரத்தை ஒப்படைக்க வேண்டும். ஊழியரின் மாதாந்த இணைந்த படியில் 7.5% ஆன மாதாந்தப் பங்களிப்பாக பணிப்பாளருக்கு சேவைத்திட்டக் குழுவிற்கு, சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு செலுத்துவதற்கு இணங்க வேண்டும். அங்கத்துவத் தொகை.

(ii) சேவைத் திட்டச் சங்கம் அல்லது யூனியன் அல்லது மூலமாக திட்ட முறைமைக்கு இணைகின்ற ஒவ்வொரு அங்கத்தவருக்காகவும் பன்னிரெண்டாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ. 12,500) அங்கத்துவத் திட்ட முறைமைக்கு இணைந்த திகதி தொடக்கம் பணிப்பாளர் மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்ட கால எல்லைக்குள் ஒரே தடவையில் அல்லது தவணை அடிப்படையில் பணிப்பாளருக்குச் செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் பணிப்பாளரினால் பிறப்பிக்கப்படுகின்ற கால வரையறை 06 மாதங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். சங்க விசேட பங்களிப்பு.

(iii) சேவைத் திட்டச் சங்கம் அல்லது யூனியன் அல்லது மூலமாக ஒவ்வொரு ஊழியரதும் மாதாந்த சம்பளத்தில் இருந்து அறவிட்டுக் கொள்ளும்படி மாதாந்த அங்கத்துவத் தொகை அடுத்த மாத முடிவுக்கு முன்னரான திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளருக்குக் கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அங்கத்துவப் பங்களிப்புப் பரிமாற்றம்.

தண்டப்பணம் அறவிடல்.

(iv) மேலே 5. (iii) இல் நியதிப்படி உரிய திகதிக்கான அங்கத்துவத் தொகை பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கத் தவறிய பட்சத்தில், உரிய கூட்டுறவுச் சங்கம் மூலம் அல்லது யூனியன் அல்லது கீழ்க்காணப்படும் முறையில் தண்டப் பணம் செலுத்தப்பட வேண்டிய நிலை தோன்றும்.

அத்தண்டனைப் பணம் பணிப்பாளர் மூலம் விதிக்கப்பட்ட திகதிக்குள் செலுத்தி முடிக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 10 நாட்கள் தாமதமாகாதவிடத்து | - 05% |
| தாமத நாட்கள் 11 இற்கும் 01 மாதத்திற்கும் இடைப்பட்டதாயின் | - 15% |
| தாமத மாதம் 01 இற்கும் 03 மாதத்திற்கும் இடைப்பட்டதாயின் | - 20% |
| தாமத மாதம் 03 இற்கும் 06 மாதத்திற்கும் இடைப்பட்டதாயின் | - 30% |
| தாமத மாதம் 06 இற்கும் 12 மாதத்திற்கும் இடைப்பட்டதாயின் | - 40% |
| தாமதம் 12 மாதங்களுக்கு மேற்படுமிடத்து | - 50% |

குறைந்தபட்ச அங்கத்துவக் கட்டணம் மற்றும் ஓய்வூதிய உரித்து.

6. மேலே இத்திட்ட முறைமையின் அங்கத்தவர் ஒருவர், ஓய்வூதிய உரித்துப் பெற்றுக்கொள்வதற்காக குறைந்தபட்சம் 60 மாத காலங்கள் அங்கத்துவக் கட்டணம் கட்டாயமாக பணிப்பாளரிடம் செலுத்தி பூரணப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.

(i) (அ) ஓய்வூதிய நியதிச் சட்டம் நடைமுறையாகின்ற திகதிக்கு 55 வயதிற்கு மேற்படாத அங்கத்தவர் ஒருவர் தொடர்பில், 60 தவணைகளில் தன்னுடைய குறைந்தபட்ச அங்கத்துவக் கட்டணத்தினைச் செலுத்த முடியாத சந்தர்ப்பத்தில், எஞ்சிய அட்டுறு தவணைக் கட்டணப் பெறுமதி ஒரு தடவையில் அல்லது பகுதி பகுதியாக அங்கத்தவர்கள் மூலம் இறுதியாகக் கிடைத்த அட்டுறுவான தவணைக் கட்டணம் இறுதியாகக் கிடைத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு, வயது 60 ஆகும்போது பணிப்பாளருக்கு உரிய அங்கத்துவத் தொகையினைச் செலுத்தி முடிக்க வேண்டும்.

(ஆ) அவ்வாறாயின் ஏதேனும் ஒரு காரணத்தால் வயது 60 வருடங்கள் ஆகும்போது குறைந்தபட்சத் தொகையான 60 மாத தவணைகளுக்கான தொகையினைச் செலுத்தி முடிப்பதற்கு அங்கத்தவர் ஒருவருக்கு முடியாவிட்டால், ஓய்வுபெற்ற ஒரு வருட அதிஉச்ச கால எல்லைக்குள் செலுத்தி முடிக்க வேண்டும்.

(இ) 06. (i) மற்றும் 06. (ii) கீழான அங்கத்துவத் தொகையினைச் செலுத்தி முடிக்கின்ற அங்கத்தவர் ஒருவருக்கு, ஓய்வூதியத்திற்கான உரிமை கிடைக்கப்பெறுவது இந்நியதிச் சட்டங்களின் (அ) உப பிரிவின் அட்டவணை இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஆகும்.

(ii) (அ) ஓய்வூதிய நியதிச் சட்டம் நடைமுறையாகும் தினத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள, நியதிச் சட்டம் நடைமுறையாகும் தினத்திற்கு ஓய்வுபெற்று உள்ள, இவ் ஓய்வூதியத் திட்ட முறைமையில் அங்கத்துவம் பெற்றுள்ள அங்கத்தவர் ஒருவர், தனது குறைந்தபட்ச அங்கத்துவத் தொகையான 60 தவணைக்கான கட்டணத்தினையும் ஒரே தடவையில் அல்லது பகுதி பகுதியாக, அவரால் இறுதியாகப் பெற்றுக்கொண்ட சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒரு வருட கால எல்லைக்குள் செலுத்தி முடிக்க வேண்டும்.

(ஆ) மேலே 06. (ii) (அ) இன் கீழ் அங்கத்துவத் தொகையினைச் செலுத்தி முடித்த அங்கத்தவர் ஒருவர், ஓய்வூதியத்திற்கான உரிமையினைப் பெற்றுக்கொள்வது இந்நியதிச் சட்டத்தின் (அ) உப அட்டவணையின் இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரமே ஆகும்.

(இ) இத்திட்ட முறைமையில் இணைந்த சந்தர்ப்பத்தில் அடுத்த பிறந்த திகதிக்கு வயது 55 வருடங்களுக்கு மேற்படாத அங்கத்தவர் தொடர்பில், இந்நியதிச் சட்டத்தின் (அ) உப அட்டவணையின் இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட விதத்தில் குறைந்தபட்ச மாதாந்த அங்கத்துவத் தொகையினைச் செலுத்த வேண்டியதோடு, அவ் அட்டவணையின் iv ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை உடையவராவார்.

7. வைத்திய ஆலோசனையின்படி ஓய்வுபெற்ற அங்கத்தவர் ஒருவர் தொடர்பில், *வைத்திய காரணங்களுக்கான வரப்பிரசாதம்.*

(i) அவர் ஓய்வுபெற்ற திகதிக்கு வயது 50 இற்கு மேற்படாத அங்கத்தவர் ஒருவர், குறைந்தபட்ச அங்கத்துவத் தவணைக் கட்டணம் 60 தவணைகளைச் செலுத்தி உள்ளபோது, வயது 60 பூர்த்தியானதன் பின்னர் ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்கு உரிமை பெற்றவராவார்.

(ii) அங்கத்தவர் ஓய்வுபெற்ற திகதிக்கு வயது 50 இற்கு மேற்படாத ஓர் அங்கத்தவராயின், குறைந்தபட்சம் 120 தவணைகளுக்கான தொகையினைச் செலுத்தி உள்ள சந்தர்ப்பத்தில், வயது 60 வருடங்கள் பூர்த்தி அடைந்ததன் பின்னரே ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை கொண்டவராவார்.

(iii) அவ்வாறு நிகழ்ந்தாலும் அங்கத்தவரின் கோரிக்கையின்படி, அதுவரை கிடைக்கப்பெற்ற அங்கத்துவத் தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகை, ஆலோசனைக் குழுவின் ஆலோசனைப் பிரகாரம் ஒரே தடவையில் செலுத்தப்பட உள்ள கோவைத் தொகையாகப் பெற்றுக்கொள்வதற்கு அங்கத்தவர் உரிமை பெறுகின்றார்.

(iv) அங்கத்தவர் ஒருவருக்கு உரிமை இருப்பது மேலே 07. (i) அல்லது 07. (ii) இன்கீழ் ஓய்வூதியம் ஒன்று அல்லது 07. (iii) இன் கீழான கோவைத் தொகை அல்லது அதுபோன்ற இரண்டில் ஒரு வரப்பிரசாதம் மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கே ஆகும்.

(v) வயது 50 வருடங்களுக்கு மேற்பட்ட ஊழியர்கள் தொடர்பில், குறைந்தபட்ச அங்கத்துவத் தொகையாக 60 தவணைகளுக்கு செலுத்தப்படாதவிடத்து, பணிப்பாளர் மூலம் விதிக்கப்படுகின்ற கால எல்லைக்குள் செலுத்தப்பட வேண்டிய அங்கத்துவத் தவணைக் கட்டணத்தை ஒரே தடவையில் அல்லது பல தவணைகளில் அல்லது செலுத்தி முடிக்கப்பட்ட அங்கத்தவருக்கு, வயது 60 இனைப் பூர்த்தியானபோது ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்கு உரிமை பெற்றவராகின்றார். அட்டுறுத் தவணைத் தொகை செலுத்தப்பட வேண்டும் என விதிக்கப்பட்ட கால எல்லை, அங்கத்தவரின் வயது 60 பூர்த்தியான நாளில் அல்லது கொடுப்பனவு விதிக்கப்பட்ட திகதி தொடக்கம் ஒரு வருட கால எல்லைக்குள் இரண்டில் முதலாவது வருகின்ற திகதி ஆக வேண்டும்.

(vi) வயது 50 இற்குக் குறைவான ஊழியர்கள் தொடர்பில், குறைந்தபட்ச அங்கத்துவத் தவணைக் கட்டணம் 120 தவணைகள் செலுத்தப்பட்டு இல்லாதவிடத்து, அங்கத்தவரிடம் இருந்து இதுவரை கிடைக்கப்பெற்ற தொகை மற்றும் அதற்குரிய வட்டித் தொகை ஆலோசனைக் குழுவின் இயக்கப்பாட்டின் பேரில் ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டிய கோவைத் தொகையாகக் கிடைப்பதற்கு அவ்வாறான அங்கத்தவர் ஒருவருக்கு உரித்து கிடைக்கப்பெறுகின்றது.

(vii) மேலே 07. (v) இன்கீழ் உரிமை பெறாவிட்டால், அவ்வாறான அங்கத்தவர் ஒருவருக்காக ஆலோசனைச் சபையின் உடன்பாட்டுடன், தேறிய அங்கத்துவத் தொகை மற்றும் அதற்கான வட்டி ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டிய கோவைத் தொகையாகப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர் ஆவார்.

8. அங்கத்தவர் ஒருவர் ஓய்வூதியம் பெறுவதற்கு முன்னர் கூட்டுறவுச் சேவையில் இருநது கேட்டு விலகிச் செல்வதாயின், அவர் திட்ட முறைமையில் இருந்து விலகியதாக கருதிக்கொள்ள வேண்டியதோடு, அவ்வாறான ஒருவர் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையின் பேரில், பணிப்பாளர் மூலம் ஆலோசனைச் சபையின் உடன்பாட்டுடன், தேறிய அங்கத்துவத் தொகை மற்றும் அதற்கான வட்டி ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டிய கோவைத் தொகையாகப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர் ஆவார். *சேவையில் இருந்து கேட்டு விலகிச் சென்றபோது கிடைக்கப்பெறுகின்ற வரப்பிரசாதங்கள்.*

எவரேனும் ஓர் உறுப்பினர் சட்ட ரீதியாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற்றுக்கொண்டு தற்காலிகமாகக் கூட்டுறவுச் சேவையில் இருந்து விலகிச் சென்ற சந்தர்ப்பத்தில், அச்சம்பளத்துடன் கூடிய சேவைக் காலமானது ஓய்வூதியத்தினை மதிப்பீடு செய்கின்றபோது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாததோடு, அக்காலத்திற்காக அங்கத்துவத் தொகை அறவிடப்பட மாட்டாது.

*சம்பளத்துடன் கூடிய விடுமுறை பெற்றுக் காணப்படின்.*

9. ஏதேனும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் அல்லது சட்ட ரீதியாக பதிவுசெய்வதற்காக பதிவினை இரத்துச் செய்துள்ளவிடத்து, சங்கம் அல்லது யூனியன் அல்லது பதிவனை இரத்துச்செய்த திகதி வரை அங்கத்துவத் தொகையினைச் செலுத்தப்படாதவிடத்து,

*இரத்துச் செய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியனுக்கு அல்லது அங்கத்தவருக்கான பிரதிபலன்கள்.*

(i) சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவினை இரத்துச்செய்த திகதிக்கு 50 வயதிற்கு மேற்படாத அங்கத்தவர் ஒருவர் குறைந்தபட்சம் அங்கத்துக் கட்டணமாக 120 தவணைகளைச் செலுத்தி இருப்பின். 60 வயது பூர்த்தி அடைந்ததன் பின்னர் ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்கு உரித்து உடையவராவார்.

(ii) சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவினை இரத்துச் செய்யப்பட்ட திகதிக்கு வயது 50 வருடங்களுக்கு மேற்படாதவிடத்து, வயது 60 பூர்த்தி அடைந்ததன் பின்னர் ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்கு உரித்து உடையவராவார்.

(iii) அவ்வாறாயின் அங்கத்தவர் கோருமிடத்து, அதுவரை பெற்றுக்கொள்ளப்பட்டு வந்த அங்கத்துவத் தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகையினை ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின் பேரில் ஒரே தடவையில் செலுத்தப்படுகின்ற கோவைத் தொகையாகப் பெற்றுக்கொள்வதற்கு அங்கத்தவர் உரித்து உடையவராவார்.

(iv) அங்கத்தவர் ஒருவருக்கு உரிமை இருப்பது, மேலே 09. (i) அல்லது 09. (ii) இன்கீழ் ஓய்வூதியம் அல்லது 09. (iii) இன்கீழ் கோவைத் தொகை அல்லது இரண்டில் ஒரு சலுகையினைப் பெற்றுக்கொள்வதற்கே ஆகும்.

(v) 50 வயதிற்கு மேற்பட்ட ஓர் ஊழியர் தொடர்பில், குறைந்தபட்ச அங்கத்துவக் கட்டணம் 60 தவணைகள் செலுத்தாதவிடத்து, பணிப்பாளர் மூலம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அட்டுறு அங்கத்துவத் தொகையினை ஒரே தடவையில் அல்லது பல தவணைகளில் அல்லது பூரணமாக செலுத்தி முடித்த அங்கத்தவர் ஒருவருக்கு, 60 வயது பூர்த்தி அடைந்ததன் பின்னர் ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்கு உரிமை உடையவராவார். அட்டுறு தவணைக் கட்டணத்தினைச் செலுத்துவதற்கு குறித்தொதுக்கப்பட்ட கால எல்லை, அங்கத்தவரின் வயது 60 பூர்த்தியான திகதியில் அல்லது செலுத்தப்பட வேண்டிய திகதி தொடக்கம் ஒரு வருட கால எல்லை என்பன இரண்டில் முதலாவதாக வருகின்ற திகதியாக இருக்க வேண்டும்.

(vi) 50 வயதிற்குக் குறைவான ஊழியர் ஒருவர் தொடர்பில், குறைந்தபட்சத் தவணைக் கட்டணமாக 120 இனைச் செலுத்தாதவிடத்து, அங்கத்தவரினால் இதுவரையில் செலுத்தப்பட்ட அங்கத்துவத் தொகை மற்றும் அதற்குரிய வட்டித் தொகை ஆலோசனைக் குழுவின் உடன்பாட்டின் பேரில் ஒரே தடவையில் செலுத்தப்படும் வரை கோவைத் தொகையாகப் பெற்றுக்கொள்வதற்கு அப்படிப்பட்ட அங்கத்தவர் ஒருவருக்கு உரிமை உள்ளது.

(vii) மேலே 09. (v) இன்கீழ் உரித்துடையவர் அல்லாதவிடத்து, அப்படிப்பட்ட அங்கத்தவர்களுக்காக ஆலோசனைக் குழுவின் இணக்கப்பாட்டுடன் தேறிய அங்கத்துவத் தொகை மற்றும் அதற்குரிய வட்டித் தொகை ஒரே தடவையில் செலுத்தப்பட்ட கோவைத் தொகையாகப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராவார்.

*இறப்பீட்டுப் பணிக்கொடைத் தொகையைப் பெற உள்ளவர்கள்.*

10. அங்கத்துவத் திட்ட முறைமைக்கு ஏதேனும் மேலதிக அங்கத்துவத் தொகையினைச் செலுத்தாத சந்தர்ப்பத்தில் இறப்புக்கான தொகையினைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி இறப்புக்கான தொகைக்கு உரிமை கிடைக்கப்பெற வேண்டும்.

11. இங்கு (ஆ) உப அட்டவணையின் I ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டு உள்ள சேவைக்கால அங்கத்தவரான பட்சத்தில், II ஆவது நிரலில் குறிப்பிடப்பட்ட இறப்பீட்டுத் தொகையினைப் பெற்றுக்கொள்வதற்கு விதிக்கப்பட்டு உள்ளபடி அங்கத்தவரின் சம்பாத்தியத்தில் வாழ்கின்றவர்கள் உரிமை கிடைக்கப்பெறும்.

(i) இறந்த அங்கத்தவர் திருமணமாகாதபோது,

(அ) விதவை (மனைவி)/ தபுதாரனான கணவனுக்கு மரண இழப்பீட்டுத் தொகை அல்லது பகுதி, தொழிலற்ற திருமணமாகாத பிள்ளைகளுக்கு மத்தியில் எஞ்சிய பகுதியை சமமாகப் பகிர வேண்டும்.

(ஆ) தொழிலற்ற திருமணமாகாத பிள்ளைகள் இல்லாத சந்தர்ப்பத்தில், மொத்த மரண இழப்பீட்டுத் தொகையையும் விதவை (மனைவி)/ தபுதாரனான கணவனுக்குப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை உள்ளது.

(இ) அங்கத்தவரின் விதவை (மனைவி)/ தபுதாரனான கணவன் உயிரோடு இல்லாத சந்தர்ப்பத்தில் மொத்த மரண இழப்பீட்டுத் தொகை திருமணமாகாத பிள்ளைகளுக்கு மத்தியில் சமமாகப் பகிரப்பட வேண்டும்.

(ii) மரணமடைந்த அங்கத்தவர் திருமணம் முடிக்காத ஒருவரான சந்தர்ப்பத்தில்,

(அ) இவ் அங்கத்தவரின் தாய் மற்றும் தகப்பன் இருவருக்கும் இடையில் அந்த மரண இழப்பீட்டுத் தொகை மொத்தமாகச் சமமாகப் பகிரப்பட வேண்டும். தாய் மற்றும் தகப்பன் போன்ற இருவரில் ஒருவர் மாத்திரம் உயிரோடு இருப்பாராயின், அவர்களுக்கு மொத்த இறப்பிற்கான பணிக்கொடையினையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

(ஆ) தாய் அல்லது தந்தை இருவரும் உயிருடன் இல்லாத சந்தர்ப்பத்தில், திருமணமாகாத, வேலை இல்லாத சகோதர சகோதரிகளுக்கு மத்தியில் இறப்பீட்டுப் பணிக்கொடை சமமாகப் பகிரப்படும்.

(iii) மரணமடைந்த அங்கத்தவரின் இறப்பீட்டுப் பணிக்கொடை பருவமடையாத சிறுவர்களுக்கு உரித்தாக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களின் பெயரில் கிராமிய வங்கியில் அல்லது தேசிய சேமிப்பு வங்கியில் அல்லது மக்கள் வங்கியில் அல்லது இலங்கை வங்கியில் அல்லது சிறு பராயத்தினர் கணக்கில் வைப்புச் செய்து அது சம்பந்தமாக உரிய பொறுப்பாளருக்குத் தெரியப்படுத்த வேண்டியதோடு, அவற்றை ஆவணப்படுத்தி கணக்கு வைப்புப் புத்தகம்/ சான்றிதழ் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். சிறு பிள்ளை பருவமடைந்ததன் பின்னர் அவற்றை விடுவித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iv) பராமரிப்பில் இருப்பவர்கள் தொடர்பில் தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சினைகள் தோன்றுகின்ற எல்லா சந்தர்ப்பத்திலும், பணிப்பாளர்கள் மூலம் ஆலோசனைச் சபையின் இணக்கப்பாட்டின் பேரில் தீர்மானிக்கப்படுகின்ற தங்கி வாழ்பவர்களுக்காக செலுத்தப்பட வேண்டும்.

மரணமடைந்து 90 நாட்களுக்குள் அது தொடர்பாக தெரியப்படுத்த வேண்டும்.

12. அங்கத்தவரின் கீழ் தங்கி வாழ்பவர்கள் மரணமடைகின்ற சந்தர்ப்பத்தில் இறப்பீட்டுப் பணிக்கொடையினைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை பெறுகின்ற சந்தர்ப்பத்தில், தனக்கு அந்த உரிமையினைப் பெற்றுக்கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வு தொடர்பில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அவ் அங்கத்தவர் மூலம் படி இறப்பீட்டுப் பணிக்கொடையினைப் பெற்று அந்த மரணம் நிகழ்ந்து 90 நாட்களுக்குள் பணிப்பாளருக்கு அறிக்கைச் சமர்ப்பிக்க வேண்டும்.

*மரணித்த அங்கத்தவரின் பணம்.*

13. அங்கத்தவர் மரணமடைந்த சந்தர்ப்பத்தில் பணிப்பாளர் மூலம் ஆலோசனைக் குழுவின் தீர்மானத்தின் பேரில் அங்கத்தவரின் தேறிய அங்கத்துவத் தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகை, கோவைத் தொகையாக 11 ஆவது கட்டளையில் குறிப்பிடப்பட்டு உள்ள முறையில் அங்கத்தவரின் கீழ் தங்கி வாழ்பவர்களுக்கு செலுத்தப்பட வேண்டும்.

*சான்றிதழை மீண்டும் செல்லுபடியானதாக மாற்றி மீண்டும் 30 நாட்களுக்குள் மேன்முறையீடு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும்.*

14. நியதிச் சட்டத்தின் 14 (ii) இன் கீழ் எவரேனும் ஓர் அங்கத்தவருக்கு நன்மையும் கிடைக்கப்பெறாதவிடத்து, அது தொடர்பில் அங்கத்தவருக்கு பணிப்பாளர் அறியப்படுத்திய நாள் தொடக்கம் தான் உறுதிப்படுத்தி தனது சான்றிதழை மீண்டும் செல்லுபடியானதாக மாற்றிக்கொள்வதற்கு 30 நாட்களுக்குள் பணிப்பாளருக்கு மேன்முறையீடு ஒன்றினைச் சமர்ப்பிக்க முடியும்.

*சேவையில் இருந்து தரம், கீழ்ப் படுத்துவதாயின் அல்லது பதவியில் இருந்து பதவியை விட்டுச் சென்ற ஓர் அங்கத்தவர் தொடர்பில்.*

15. (i) எவரேனும் ஓர் அங்கத்தவர் கூட்டுறவுச் சேவையில் இருந்து தரம் கீழ்ப்படுத்துவதாயின் அல்லது பதவியில் இருந்து பதவியை விட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்பட்ட ஒருவராகக் கருதி அல்லது அவர் திட்ட முறைமையில் இருந்து விலகிச் சென்றதாகக் கருதப்பட வேண்டியதோடு, அவ்வாறான ஒருவர் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையின் பேரில் பணிப்பாளர் மூலம் ஆலோசனைக் குழுவின் உடன்பாட்டின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்ற அங்கத்தவரின் தேறிய தொகை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு அங்கத்தவருக்கு உரிமை உள்ளது.

*சட்ட ரீதியான பரிசோதனையின் போது குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்ட ஓர் அங்கத்தவர் தொடர்பில்.*

(ii) அவ்வாறாயின், சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு ஒரு நட்டத்தினை ஏற்படுத்தி உள்ளதாக சட்டபூர்வமாக பரிசோதனை ஒன்று நடாத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தின் பின்னர் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட தேறிய அங்கத்துவத் தொகை அவருக்குச் செலுத்தப்பட வேண்டியது, சங்கத்தின் நட்டத்தினைப் பூரணமாக மீளளிப்புச் செய்து இருப்பின், அல்லது சட்ட ரீதியான பரிசோதனை முடிவடைந்ததன் பின்னர் சங்கத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்பதனை உறுதிப்படுத்தினால் மாத்திரமே.

*மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்ட அங்கத்தவர் தொடர்பில்.*

16. எவரேனும் ஓர் அங்கத்தவர் கூட்டுறவுச் சங்க சேவையில் இருந்து சேவைத் தடைக்கு உட்பட்ட ஒருவர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டால் பணிப்பாளர் மூலம் விதிக்கப்படுகின்ற கால எல்லைக்குள் அட்டுறு அங்கத்துவத் தொகையினைச் செலுத்தப்பட வேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு செலுத்தி முடிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி அங்கத்தவருக்கு அறியப்படுத்த வேண்டியதோடு, அத்திகதிக்கு முன்னர் அட்டுறு அங்கத்துவத் தொகை அவருடைய சான்றிதழ் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

17. (i) நியதிச் சட்டத்தின் 13. (i) பிரிவின் கீழ் எவரேனும் ஓர் அங்கத்தவருக்கு உரிய சலுகைகள் கிடைக்கப்பெறாதவிடத்து, அதற்காக அறிவித்தல் ஒன்று பணிப்பாளர் மூலம் அவ் அங்கத்தவருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

(ii) மேலே 17. (i) கோரிக்கையின் பிரகாரம் திட்ட முறைமையில் தொடர்ந்து இருப்பதற்காக எதிர்பார்ப்பதாயின், அவரால் சங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்டு உள்ள நட்டஈடு பூரணமாக செலுத்தி முடித்ததன் பின்னர் பணிப்பாருக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்க முடியும். 17. (i) பிரிவிற்கு இணங்க அறிவித்தல் கிடைத்து 03 மாத காலத்திற்குள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(iii) மேலே 17. (ii) கோரிக்கையின் பிரகாரம் திட்ட முறைமையில் தொடர்ந்து இருப்பதற்காக இடம் கிடைத்தபோது, பணிப்பாளர் மூலம் விதிக்கப்படுகின்ற கால எல்லைக்குள் அட்டுறு அங்கத்துவத் தொகையினைச் செலுத்தி முடிக்கப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தி முடிக்கப்பட வேண்டிய திகதி அங்கத்தவருக்கு தெரியப்படுத்த வேண்டியதோடு, அத்திகதிக்கு முன்னர் அட்டுறு அங்கத்துவத் தொகையினைச் செலுத்த முடியாதவிடத்து அவருடைய சான்றிதழ் இரத்துச் செய்யப்பட்டதாகக் கவனத்தில் கொள்ளப்படும். எவ்வாறாயினும் பணிப்பாளர் மூலம் விதிக்கப்படுகின்ற 6 மாத கால எல்லைக்கு மேற்படாததாக இருக்க வேண்டும்.

18. (i) வயது 55 வருடங்கள் பூர்த்தியானதன் பின்னர், எவரேனும் ஓர் அங்கத்தவரின் வயது 60 வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் முறையாக ஊழியர்கள் சேவையில் இருந்து ஓய்வுபெறுகின்ற அங்கத்தவர் ஒருவருக்கு, அவர் ஓய்வுபெறுகின்ற சந்தர்ப்பத்தில் செலுத்தி முடிக்கப்பட்டு உள்ள அங்கத்துவத் தொகையின் தவணைகளின் எண்ணிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, இந்நியதிகளின் (அ) உப அட்டவணையின் இலக்கம் 01 இல் (iv) ஆவது நிரலில் காட்டப்படுகின்ற ஓய்வூதியம் பெறுவதற்கு வயது 60 பூர்த்தியான திகதி தொடக்கம் உரித்துடையவர் ஆவார். *வயது 60 பூர்த்தி யாகும் முன்னர் ஓய்வுபெற்ற ஓர் அங்கத்தவர் தொடர்பாக.*

(ii) அவ்வாறின்றி அப்படியான ஓர் அங்கத்துவர் மூலம் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையின் பேரில், பணிப்பாளர் மூலம் ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின் பிரகாரம் தீர்மானம் எடுக்கப்பட்ட அங்கத்தவரின் தேறிய தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகை, ஒரே தடவையில் செலுத்தப்படுகின்ற கோவைத் தொகையாகப் பெற்றுக்கொள்வதற்கு அதன் அங்கத்தவர் உரித்துடையவர் ஆவார்.

(iii) அதன் அங்கத்தவருக்கு உரிமை இருப்பது 18. (i) இன் கீழ் ஓய்வூதியம் அல்லது 18. (ii) இன் கீழ் கோவைத் தொகை போன்ற இரண்டில் ஒரு நன்மை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு.

19. இந்நியதிகளின் வரைபுகளின் 7, 9 மற்றும் 18 ஆவது பிரிவுகளின்படி ஓய்வூதியம் உரித்துப் பெற்ற ஓர் அங்கத்தவரின் வயது 60 வருடங்கள் பூர்த்தி அடைவதற்கு முன்னர் மரணமடைவாராயின், இங்கு (ஆ) உப அட்டவணையின் பிரகாரம் கணிப்பீடு செய்யப்பட்ட இறப்பீட்டுப் பணிக்கொடை மற்றும் 13 ஆவது கட்டளையில் குறிப்பிடப்பட்ட கோவைத் தொகை இந்நியதிகளின் வரைபுகளின் 11 ஆவது பிரிவின் பிரகாரம் உரிமை பெறுகின்ற தரப்பினர்களுக்கு செலுத்தப்பட வேண்டும். *வயது 60 வருடங்களுக்கு முன்னர் சேவையில் இருந்து விலகிச் சென்று ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் மரணமடைந்த அங்கத்தவர் தொடர்பில்.*

20. இந்நியதிகளின் வரைபுகளின் கீழ் செலுத்தப்பட்ட தொகையினைப் பெறுவதற்கு உரிமைபெற்ற ஓர் அங்கத்தவர் மூலம், சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது நட்டத்தனை மேற்கொண்டு இருப்பதனை சட்ட ரீதியான சோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டு உள்ள சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வாறு சட்ட ரீதியான சோதனைகளை நிகழ்த்துகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது அதன் கோவைத் தொகையினை அவருக்குச் செலுத்தவேண்டி இருப்பது, சங்கத்தின் நட்டஈடு பூரணமாக மீளளிக்கப்பட்டு இருப்பின் அல்லது சட்ட ரீதியான சோதனை முடிவடைந்ததன் பின்னர் சங்கத்திற்கு எந்தவிதமான நட்டமும் இல்லை என உறுதிப்படுத்தியதன் பின்னர் மாத்திரமே. *சங்கத்திற்கு ஒரு நட்டஈட்டினை நிகழ்த்தி இருப்பின் கோவைத் தொகையினைத் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை.*

21. எவரேனும் ஒரு ஓய்வூதியம் பெறுபவர் மரணமடைந்தபோது அவர் மரணித்த சந்தர்ப்பம் வரை பெற்ற மொத்த ஓய்வூதியச் சம்பளத்தினைச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகைக்கு மற்றும் அதற்கான வட்டியின் அளவினைவிடக் குறைந்த சந்தர்ப்பத்தில், அக்குறைந்த தொகையினை ஓய்வுபெற்றவரின் தங்கி வாழ்பவர்களுக்கு ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டிய கோவைத் தொகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

22. இந்நியதிகளின் வரைபுகளின் கீழ், கோவைத் தொகை ஒன்று அல்லது தேறிய தொகை ஒன்று அல்லது ஒரே தடவையில் செலுத்தப்படவேண்டிய தொகையாகப் பெற்றுக்கொள்வதற்கு எவரேனும் ஒரு அங்கத்தவர் மூலம், தனது சேவைத் திட்டச் சங்கம் அல்லது யூனியன் அல்லது அத்தோடு, சட்ட ரீதியான உடன்படிக்கையின் பேரில் உடன்பட்ட ஏதேனும் ஒரு தொகை அதன் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது செலுத்தப்படவேண்டிய சந்தர்ப்பத்தில், சங்கம் அல்லது யூனியன் மூலம் அங்கத்தவரின் உடன்பாட்டுடன் பணிப்பாளருக்கு விடுக்கப்படுகின்ற கோரிக்கையினைக் கவனத்திற் கொள்ளப்பட்டதன் பிரகாரம், அவ்வாறு உடன்பாடு செய்து கொண்ட மொத்தத் தொகை அல்லது அதில் ஒரு பகுதியினைச் செலுத்துவதற்கு கோவைத் தொகை/ தேறிய தொகை மொத்தமாக அல்லது அதில் ஒரு பகுதி அல்லது கோரிக்கை விடுக்கின்ற சங்கத்திற்கு அல்லது ஆலோசனைச் சபையின் உடன்பாட்டின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டும். *கோவைத் தொகையில் அல்லது தேறிய அங்கத்துவத் தொகையில் இருந்து ஒப்பந்தத் தொகையினைச் செலுத்துதல்.*

23. இந்நியதிகளின் வரைபுகளில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரங்கள் தவிர, எவரேனும் ஓர் அங்கத்தவர் தொடர்பில் ஓய்வூதியம்/ இறப்பீட்டுப் பணிக்கொடை தொடர்பில் சிக்கல்கள் தோன்றிய சந்தர்ப்பத்தில், பணிப்பாளர் மூலம், ஆலோசனைச் சபையின் ஆலோசனையின் பேரில் தீர்மானம் எடுக்கின்ற முறையில் செயற்பட வேண்டும். *சிக்கல்கள் மேலோங்குகின்ற சந்தர்ப்பங்கள்.*

மாதிரிப் படிவங்கள்.

24. தகுதியான குறியீட்டுத் திட்டம் ஒன்றினைப் பயன்படுத்தி, நியதிச் சட்டத்தின் 14.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டு உள்ளபடி அங்கத்தவருக்கு பெற்றுக்கொடுக்கப்படுகின்ற சான்றிதழுக்கு மேலதிகமாக திட்ட முறைமை அலுவல்கள் நிருவாகம், முகாமைத்துவத்தினை ஒழுங்குபடுத்துவதற்கு, கீழ்க்காணப்படும் அத்தியாவசியமான தகவல்களை உள்ளடக்கிய மாதிரிப்படிவம் ஒன்றினைத் தயாரித்து பயன்படுத்தப்பட வேண்டும்.

(i) விருப்பினைத் தெரிவிப்பதற்கான பிரகடனப்பத்திரம்,
(ii) திட்ட முறைமையில் இணைந்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்,
(iii) அங்கத்துவத் தொகை சம்பளத்தில் இருந்து அறவிட்டுக் கொள்வதற்கான அதிகாரத்தினைக் கையளிப்பதற்கான கடிதம்,
(iv) மாதாந்த அங்கத்துவத் தொகை தடுப்பு அட்டவணை,
(v) தண்டப்பணம் அறவிடுவதற்கான அறிவித்தல்,
(vi) இறப்புப் பணிக்கொடையினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்,
(vii) கோவைத் தொகை அல்லது தேறிய அங்கத்துவத் தொகையினை மீளப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்,
(viii) அங்கத்துவத்தினை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்,
(ix) திட்ட முறைமையினை நடைமுறைப்படுத்துவதற்கு தொடர்ந்தும் அவசியம் எனக் கருதுகின்ற மாதிரிப் படிவங்கள்.

கணக்கு வைத்தல்.

25. எவரேனும் ஒரு அங்கத்தவர் தனது சேவைத் திட்ட முறைமைச் சங்கம் அல்லது யூனியன் அல்லது அதன் கீழ் விண்ணப்பித்து உள்ள, வேறு ஏதேனும் ஒரு கூட்டுறவுச் சங்கம் அல்லது நிரந்தர சேவையில் இணைந்ததாயின், அவ்வாறு இணைந்துகொண்ட திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள், திட்ட முறைமையின் பணிப்பாளருக்கு அது தொடர்பாக அறியப்படுத்த வேண்டியதுடன், பணிப்பாளர் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ள மாதிரிப் படிவங்களுக்கு ஏற்ப தனது பங்களிப்புச் சான்றிதழின் செல்லுபடியாவதனை நடாத்திச் செல்வதற்காக, அங்கத்துவத்தினை இணைப்பதற்காக விண்ணப்பிக்க முடியும்.

அங்கத்துவத்தை இணைத்துக் கொள்ளல்.

26. ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்குகளின் மூலாதாரங்கள், கொள்கைகள் மற்றும் தரத்திற்கு ஏற்ப கணக்குகளை வைத்திருப்பதற்கு பணிப்பாளர் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

வருடாந்த செலவின மதிப்பீடுகள்.

27. (i) பணிப்பாளர் மூலம் இந்நிகழ்ச்சித் திட்ட முறைமைகள் பற்றிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்த செலவின மதிப்பீடு ஒன்றினைத் தயார்படுத்தி, ஆலோசனைச் சபைக்கு முன்வைத்து, அதன் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(ii) வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி போதாத சந்தர்ப்பத்தில், அதற்காக பூரணமான ஒரு மதிப்பீடு ஒன்றைத் தயாரித்து ஆலோசனைச் சபைக்கு முன்வைத்து, அதன் அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மூன்று மாத அறிக்கை.

28. ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் மூன்று மாத காலத்திற்கான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பிலான அறிக்கை ஒன்றினைத் தயார்படுத்தி, அவ்வறிக்கை காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் ஆலோசனைச் சபைக்கு முன்வைக்க வேண்டும்.

சலுகைகள் மற்றும் சேவைகள்.

29. திட்ட முறைமைச் செயற்பாட்டினை உட்படுத்துவதற்கு தேவையான வசதிகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும்போது, மாகாண நிதிப் பிரமாணம் மற்றும் கொள்வனவுக் குழுவின் வரையறைகளுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், திணைக்களத் தலைவருக்கான வரையறைகளை மீறிச் செல்கின்ற சந்தர்ப்பத்தில் ஆலோசனைக் குழுவின் அனுமதியினைப் பெற்றுக்கொண்டு செயற்பட வேண்டும்.

சேவைப் பணிக் குழு.

30. நியதிச் சட்டத்தில் 3. (v) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன்படி, திட்ட முறைமை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சேவைப் பணிக் குழுவினைத் தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டியதோடு, அவ்வாறு ஈடுபடுத்திக் கொள்ளப்படுகின்ற தேவையான அளவு செயற்பணிக் குழுவினர்களுக்காக கூட்டுறவு ஆணையாளர் மற்றும் பதிவாளரின் அனுமதி மற்றும் ஆலோசனைக் குழுவின் சிபாரிசுடன் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கும் பணிப்பாளர் நடவடிக்கைகள் அலுவல்களை மேற்கொள்ள வேண்டும்.

*31.* பணிப்பாளர் மூலம், திட்ட முறைமைகள், செயற்பாடுகள் சபைகளுக்கான கடமைகளைப் பகுதி பகுதியாக ஒப்படைக்கும்போது தகுதியின் அடிப்படையில் கடமைகளைக் கையளித்தல் வேண்டும். *கடமைகளைக் கையளித்தல்.*

*32.* இந்நியதிச் சட்டத்தின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

**(அ) உப அட்டவணை**

**தென் மாகாண கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் ஓய்வூதியத் திட்ட முறைமை**

பட்டியல் இலக்கம் 01 :

***18-55 இற்கு இடைப்பட்ட வயதாயின் திட்ட முறைமைக்கு இணைந்து கொள்கின்ற ஊழியர்கள் செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணத் தொகை மற்றும் கிடைக்கப்பெறுகின்ற ஓய்வூதியம்.***

| I ஆவது நிரல் | II ஆவது நிரல் | III ஆவது நிரல் | IV ஆவது நிரல் |
|---|---|---|---|
| திட்ட முறைமையில் இணைந்து கொள்கின்ற சந்தர்ப்பத்தில் அடுத்த பிறந்த நாளிற்கான வயது (வருடங்கள்) | செலுத்தப்பட வேண்டிய மாதாந்த அங்கத்துவக் கட்டணத் தொகை தவணைக்கான மாதாந்த இணைப்புச் சம்பளத்தில் நூற்று சதவீத அளவு | செலுத்தப்படவேண்டிய குறைந்தபட்ச தவணைகளின் எண்ணிக்கை | வயது 60 பூர்த்தியாகின்ற சந்தர்ப்பத்தில் ஆயுள் பூராகவும் கிடைக்கப்பெறுகின்ற சம்பளம், ஓய்வூதியம் போன்று மாதத்தில் கிடைக்கப்பெறுகின்ற இணைப்புச் சம்பளத்தில் நூற்று சதவீத அளவு |
| 19 | 5 | 504 | 80 |
| 20 | 5 | 492 | 79 |
| 21 | 5 | 480 | 78 |
| 22 | 5 | 468 | 77 |
| 23 | 5 | 456 | 76 |
| 24 | 5 | 444 | 75 |
| 25 | 5 | 432 | 74 |
| 26 | 5 | 420 | 73 |
| 27 | 5 | 408 | 72 |
| 28 | 5 | 396 | 71 |
| 29 | 5 | 384 | 70 |
| 30 | 5 | 372 | 69 |
| 31 | 5 | 360 | 68 |
| 32 | 5 | 348 | 67 |
| 33 | 5 | 336 | 66 |
| 34 | 5 | 324 | 65 |
| 35 | 5 | 312 | 64 |
| 36 | 5 | 300 | 63 |
| 37 | 5 | 288 | 62 |
| 38 | 5 | 276 | 61 |
| 39 | 5 | 264 | 60 |
| 40 | 5 | 252 | 59 |
| 41 | 5 | 240 | 58 |
| 42 | 5 | 228 | 57 |
| 43 | 5 | 216 | 56 |
| 44 | 5 | 204 | 55 |
| 45 | 5 | 192 | 54 |
| 46 | 5 | 180 | 53 |
| 47 | 5 | 168 | 52 |
| 48 | 5 | 156 | 51 |
| 49 | 5 | 144 | 50 |
| 50 | 5 | 132 | 49 |
| 51 | 5 | 120 | 48 |
| 52 | 5 | 108 | 47 |

**(அ) உப அட்டவணை** *(தொடர்ச்சி)*

**தென் மாகாண கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் ஓய்வூதியத் திட்ட முறைமை**

*பட்டியல் இலக்கம் 01 :*

***18-55 இற்கு இடைப்பட்ட வயதாயின் திட்ட முறைமைக்கு இணைந்து கொள்கின்ற ஊழியர்கள் செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணத் தொகை மற்றும் கிடைக்கப்பெறுகின்ற ஓய்வூதியம்.***

| I ஆவது நிரல் | II ஆவது நிரல் | III ஆவது நிரல் | IV ஆவது நிரல் |
|---|---|---|---|
| திட்ட முறைமையில் இணைந்து கொள்கின்ற சந்தர்ப்பத்தில் அடுத்த பிறந்த நாளிற்கான வயது (வருடங்கள்) | செலுத்தப்பட வேண்டிய மாதாந்த அங்கத்துவக் கட்டணத் தொகை தவணைக்கான மாதாந்த இணைப்புச் சம்பளத்தில் நூற்றுச் சதவீத அளவு | செலுத்தப்படவேண்டிய குறைந்தபட்ச தவணைகளின் எண்ணிக்கை | வயது 60 பூர்த்தியாகின்ற சந்தர்ப்பத்தில் ஆயுள் பூராகவும் கிடைக்கப்பெறுகின்ற சம்பளம், ஓய்வூதியம் போன்று மாதத்தில் கிடைக்கப்பெறுகின்ற இணைப்புச் சம்பளத்தில் நூற்று சதவீத அளவு |
| 53 | 5 | 96 | 46 |
| 54 | 5 | 84 | 45 |
| 55 | 5 | 72 | 44 |

**அட்டவணை இலக்கம் 02**

பட்டியல் இலக்கம் 02 :

வயது 55-60 இற்கு இடைப்பட்ட வயதாயின் திட்ட முறைமைக்கு இணைந்துகொள்கின்ற ஊழியர்கள் செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணத் தொகை மற்றும் கிடைக்கப்பெறுகின்ற ஓய்வூதியம்.

| I ஆவது நிரல் | II ஆவது நிரல் | III ஆவது நிரல் | IV ஆவது நிரல் | V ஆவது நிரல் |
|---|---|---|---|---|
| திட்ட முறைமையில் இணைந்து கொள்கின்ற சந்தர்ப்பத்தில் அடுத்த பிறந்த நாளிற்கான வயது (வருடங்கள்) | செலுத்தப்படவேண்டிய மாதாந்த அங்கத்துவக் கட்டணத் தொகை தவணைக்கான மாதாந்த இணைப்புச் சம்பளத்தில் நூற்று சதவீத அளவு | செலுத்தப்பட வேண்டிய குறைந்த பட்ச தவணைகளின் எண்ணிக்கை | வயது 60 பூர்த்தியாகின்ற சந்தர்ப்பத்தில் ஆயுள் பூராகவும் கிடைக்கப் பெறுகின்ற சம்பளம், ஓய்வூதியம் போன்று மாதத்தில் கிடைக்கப் பெறுகின்ற இணைப்புச் சம்பளத்தில் நூற்று சதவீத அளவு | ஓய்வூதியம் உரித்தாகின்ற சந்தர்ப்பம் |
| 56 தொடக்கம் 59 | 5 | 60 | 40 | வயது 60 வருடங்கள் பூர்த்தியான திகதி அல்லது குறைந்தபட்ச அங்கத்துவத் தொகை 60 தவணைகள் செலுத்தி முடிக்கப்பட்ட திகதி எனும் இரு தினங்களில் பின்னர் வருகின்ற திகதி தொடக்கம் |
| 60 | 5 | 60 | 40 | குறைந்தபட்ச அங்கத்துவக் கட்டணம் 60 தவணைகளில் செலுத்தி முடித்த திகதி தொடக்கம் ஒரு வருட காலம் பூர்த்தியான திகதி தொடக்கம் |

**(ஆ) உப அட்டவணை**

**இறப்பின் போது செலுத்தப்படுகின்ற பணிக்கொடை**

| *I ஆவது நிரல்* | *II ஆவது நிரல்* |
|---|---|
| *திட்ட முறைமையில் இணைந்து கொண்ட திகதி தொடக்கம் சேவைக் காலம்* | *உரித்தாகின்ற இறப்புப் பணிக்கொடை ரூபா* |
| *வயது 0 இற்கு மேற்பட்ட - 5 இற்கு மேற்படாத* | *10,000.00* |
| *வயது 5 இற்கு மேற்பட்ட - 10 இற்கு மேற்படாத* | *15,000.00* |
| *வயது 10 இற்கு மேற்பட்ட - 15 இற்கு மேற்படாத* | *20,000.00* |
| *வயது 15 இற்கு மேற்பட்ட - 20 இற்கு மேற்படாத* | *25,000.00* |
| *வயது 20 இற்கு மேற்பட்ட - 25 இற்கு மேற்படாத* | *30,000.00* |
| *வயது 25 இற்கு மேற்பட்ட - 30 இற்கு மேற்படாத* | *35,000.00* |
| *வயது 30 இற்கு மேற்பட்ட* | *40,000.00* |

*06-546*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.